Registered as a NewsPaper

விலை ரூபா 6.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 11 | 25-03-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 35

வவுனியா நகரில் தரங்குன்றா தங்க நகைகளுக்கு நம்பிக்கை நாணயம் மிக்க நிறுவனம்

கணேசா நகையகம்

(சி-7652)

கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா

# சிறிலங்கா சுதந்திரக்கட்சி- ஜே.வி.பி. உடன்பாடு குறித்து இன்று இறுதி முடிவு!

## சனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேசுவர்

(கொழும்பு)

**சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி. யிற்குமிடையிலான அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை நாளை நடைபெறவுள்ளது. சனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ள இந்தப் பேச்சுவார்த்தையில் அரசியல் ரீதியான கட்டமைப்பு குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.**

இச்சந்திப்பில் சிறி.சு.கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் அமுனுகம, மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீர ஆகியோரும் ஜே.வி.பி. யின் சார்பில் அதன் செயலாளர் டில்வின் சில்வா, பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்ச ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் சனாதிபதியும் கலந்து கொள்வார் எனத் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, சிறி.சு.கட்சிக்கும் ஜே.வி.பி.யிற்குமிடையில் புரிந்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தகம் - முதலீடு தொடர்பாக அமெரிக்கா-சிறிலங்கா உயர்மட்டப் பேச்சு!

(கொழும்பு)

சிறிலங்காவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீடு தொடர்பான உயர்மட்டப் பேச்சுவார்த்தை இன்று வாஷிங்டனில் ஆரம்பமாகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கடந்த யூலை மாத அமெரிக்க விஜயத்தின்போது கைச்சாத்திடப்பட்ட முதலீட்டு உடன்படிக்கையின் அடிப்படையிலேயே இந்த உயர் மட்டப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

சிறிலங்கா சார்பில் அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ், ரவி கருணாநாயக்க ஆகியோரும், அமெ

(08ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 3 சீன மீனவர் சடலங்கள் நேற்றுக் கரையொதுங்கின

சீன மீனவர்கள் மூவரது சடலங்கள் நேற்று கரையொதுங்கியுள்ளன. மணற்காடு, பொற்பதி பகுதிகளிலேயே இந்த மூன்று சடலங்களும் கரையொதுங்கியுள்ளன. இதேவேளை இவர்களில் மேலும் நால்வரது சடலங்கள் நேற்று முன்தினம் குடத்தனை கடற்பகுதியில் கரையொதுங்கியிருந்தன.

மிகவும் உருக்குலைந்த நிலை

(08ஆம் பக்கம் பார்க்க)

## முதல்வர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

ஹிக்கடுவ மாநகர முதல்வர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. மாநகர முதல்வரின் அலுவலகத்திற்குள் திடீரெனப் பிரவேசித்த இந்த இனந்தெரியாத நபர் முதல்வரை சுட்டுக் கொன்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கொக்காவிலில் வீதி விபத்து; வாகனம் பலத்த சேதம்!

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 வீதியில் கொக்காவில் பகுதியில் வாகன விபத்தொன்று இடம்பெற்றுள்ளது. கொக்காவில் சந்தியில் இருந்து கிளிநொச்சிக்கு மண் ஏற்றிச் சென்று கொண்டிருந்த பாரவூர்தியும், வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த 'ஹைஏஸ்' வாகனமும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட போது 'ஹைஏஸ்' வாகனம் பலத்த சேதத்துக்குள்ளானதோடு சாரதி மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை தமிழீழ காவல்துறையின்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக்கியப் படைகளால் அமெரிக்க உலங்கு வானூர்தி நேற்றுச் சுட்டு வீழ்த்தப்பட்டது

அமெரிக்க அப்பாச்சே தாக்குதல் உலங்கு வானூர்தியொன்று நேற்று ஈராக்கிய குடியரசு இராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திற்குத் தெற்கே 96 கிலோ மீற்றர் தூரத்தில் ஈராக்கியப்

(08ஆம் பக்கம் பார்க்க)



சுட்டு வீழ்த்தப்பட்ட உலங்கு வானூர்த்திக்குமுன் கூடிக்குதூகலிக்கும் ஈராக்கிய மக்கள்.

## வெளிநாட்டவர் கண்காணிப்புக்கு சிங்களவர் மத்தியில் ஆதரவு வீழ்ச்சி

### கருத்துக் கணிப்பு தெரிவிப்பு!

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணும் விடயத்தில் வெளிநாட்டவரின் கண்காணிப்புத் தேவை என்பதில் சிங்கள மக்கள் மத்தியில் அபிப்பிராய வீழ்ச்சி ஏற்பட்டு வருவதாக கருத்துக் கணிப்பொன்று தெரிவிக்கின்றது.

யுத்தநிறுத்தத்தை வெளிநாட்டு போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் கண்காணிக்க வேண்டும் என்று தென்பகுதியில் 84.5 சதவீதமான தமிழர்களும் 84.2 சதவீதமான முஸ்லிம்களும் அபிப்பிராயம் தெரிவித்துள்ள அதேவேளை 41.1 சதவீதமான சிங்கள மக்கள் வெளிநாட்டுக் கண்காணிப்பு அவசியமற்றது என்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

இந்த 41.1 சதவீதம் முன்னர் இருந்த வீதத்தைவிட அதிகமானதாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நோர்வே தலைமையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிக்கு சிங்கள மக்கள் மத்தியில் நிலவிவரும் அதிருப்தி மேலும் அதிகரித்துள்ளது. கடந்த "மே" மாதத்தில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பின்படி 17.9 சதவீதமாக இருந்து இந்த அதிருப்தி தற்போது 29.4 சதவீதமாக உயர்ந்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் உண்மையான அரசாங்கம் சமாதானத்தை நிலை நாட்ட முயற்சிக்கின்றது என்று 56.7

(08ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் நேற்றும் ஒரு தொகுதி வெடிபொருட்கள் அழிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் விசேட பயிற்சி பெற்ற இரு அணிகளால் ஆனையிறவுப் பகுதியில் வெடிபொருட்கள் மீட்கப்பட்டு தகர்த்து அழிக்கப்பட்டுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். திருமலை கல்வி வலயங்கள் முன் தொண்டராசிரியர்கள் மறியல் போராட்டம்

யாழ்ப்பாணம் - திருகோணமலை மாவட்டங்களின் தொண்டர் ஆசிரியர்கள் அங்குள்ள கல்வி வலயங்களுக்கு முன்பாக நேற்று முதல் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டுமெனக் கோரி யாழ்ப்பாணத்தில் வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி, தீவகம் ஆகிய கல்வி வலயங்களுக்கு முன்பாக இந்த மறியல் போராட்டம் நடத்தப்படுகிறது.

திருகோணமலையில் மாகாண கல்வி அமைச்சிற்கு முன்னால் இந்தப் போராட்டம் நடைபெறுகிறது. இந்தப் போராட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த வலயப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்

**தவறிவிட்டது**

வையித்திலிங்கம் நாகேஸ்வரி இல:204/2, கிளி/திருவையாறு ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல:476563895V) தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கிளி நொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (3042)

# இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு திட்டமிட்டபடி அமெரிக்காவில் நடைபெறும்

### அமெ. அரசாங்கம் உத்தியோகபூர்வ அறிவிப்பு

இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு திட்டமிட்டபடி ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் நடைபெறும் என்று அமெரிக்க அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

யூன் மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கு முன்னோடியாகவே இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

வொஷிங்டனில் நடைபெறவுள்ள ஒத்துழைப்பு மாநாட்டிற்கு அமெரிக்க பிரதி இராஜங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேச் தலைமை தாங்கவுள்ளார் என பொருளாதார சீர்திருத்த விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் மாநாட்டுக்கு முன்னர் இலங்கையிலும் முன்னோடி மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

வொஷிங்டனில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு 29 நாடுகளின் நிதியமைச்சர்களுக்கும் 25 சர்வதேச நிதி அமைப்புக்களுக்கும் அமெரிக்கப் பிரதி இராஜங்க அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியா, சீனா, கனடா, அவுஸ்திரேலியா, நோர்வே, சுவிடன், சுவிசர்லாந்து ஆகிய நாடுகளும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கின்றன.

இதேவேளை, வொஷிங்டன் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இந்த நாடுகளுக்கும் நிதி அமைப்புக்களுக்கும் அமைச்சர் மிலிந்த மொறகொட பிரத்தியேக அழைப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

## வழிகாட்டல் கருத்தமர்வு

தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் பரீட்சை வழிகாட்டல் கருத்தமர்வு 2003 - உயர்தர மாணவர்களுக்கு இடம் பெற்றது. இதில் விஞ்ஞான, கலைப்பிரிவு மாணவர்கள் பங்குகொண்டு பயன்பெற்றனர்.

மு/புதுக்குடியிருப்பு ம.வி. கிளி/மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் 22,23 ஆகிய திகதிகளில் இவை இடம்பெற்றன.

# மோட்டார் ஊர்திகளை பதிவு செய்யக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல மோட்டார் வாகன உரிமையாளர்களையும் தமது வாகனங்களை தங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தர்கள் மூலமாக உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பதிவுசெய்து அதற்கான அத்தாட்சிக் கடிதத்தை பெறுமாறு மோட்டார் வாகன உரிமையாளர்கள் அறிவுறுத்தப் படுகின்றனர். இவ் அத்தாட்சிக் கடிதத்தினை காண்பித்தாலே எரிபொருள் நிலையத்தில் எரிபொருட்கள் பெறமுடியும் என கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

(சோ,லோ)

## நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு

# நியாப் நிறுவனத்தினால் உழவு இயந்திரம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினருக்கு புதிய இரண்டு உழவுஇயந்திரங்களையும் இழுவைப் பெட்டிகளையும் நியாப் நிறுவனம் வழங்கியுள்ளது. இந்தியத்தயாரிப்பான மகேந்திரா உழவு இயந்திரங்களே நியாப் நிறுவனத்தினால் கடந்தவாரம் கிளி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

மேற்படி திணைக்களத்தில் கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக உழவு இயந்திர மற்ற நிலையில் தொண்டர் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் ஒத்தாசையுடனேயே நீர்ப்பாசனத்திற்குரிய மண் வேலைகள் மேற்கொள்ளப் பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(சோ,லோ)



# கற்றாக் சிகிச்சைக்கு வருகை தரக்கோரிக்கை

கண்டியில் நடைபெறவுள்ள கற்றாக் சிகிச்சைக்கென கிளி. மாவட்ட வைத்தியசாலையில் பதிவுசெய்தோரில் பின் வருவோர் 28.03.2003அன்று வைத்தியசாலைக்கு பயண ஆயத்தத்துடன் வருகை தருமாறு மாவட்ட வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

செல்லத்தம்பி பராசக்தி திருநகர் வடக்கு, செல்லப்பா இலட்சுமி பழைய வட்டக்கச்சி, இலட்சுமணன் ஆறுமுகம் பரந்தன், இளையதம்பி செல்லத்துரை பரந்தன், முத்தையா அழகம்மா கணேசபுரம், முருகேசு சுந்தரம் 8ஆம் கட்டை, ஆரோக்கியபுரம், சிவக்கொழுந்து அன்னபூரணம் கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், இராயப்பு மரியநாயகம் கோணாவில் றோட் கிளிநொச்சி, சின்னையா சிவகாமி 4ஆம் துண்டு அக்கராயன், புவனேஸ்வரன் இலட்சுமி ஜெயந்திநகர், இராமசாமி கதிர்காமு அக்கராயன், அப்பாக்குட்டி லீலாவதி அம்பலப்பெருமாள் சந்தி, இராசு ஜெயலட்சுமி ஜெபநேசன் குடியிருப்பு அக்கராயன், ஜோர்ச் அன்னலட்சுமி அம்பலப்பெருமாள் சந்தி, சந்தணம் காளியம்மா திருமுறுகண்டி, பெரியதம்பி பெரியக்கா யூனியன்குளம், சந்தணம் கந்தையா ஆனைவிழுந்தான், சிவசம்பு பூபதி பெரிய பரந்தன்.

(சோ,லோ)

# இலங்கைக்கான உதவியை ஜேர்மனி அதிகரிக்கிறது

இலங்கைக்கான உதவியை ஜேர்மனி அதிகரிக்கவுள்ளது.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற 2003, 2004 ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஒத்துழைப்பு பற்றிய இருதரப்பு பேச்சுக்களின் போது இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சில் இதற்கான உடன்படிக்கையும் கைச்சாத்திடப் பட்டுள்ளது. வறுமை ஒழிப்பு மற்றும் உள்நாட்டு பூசல்களை நிறுத்துதல் போன்ற விவகாரங்களுக்கு இந்நிதி பயன்படுத்தப்படும்.

## மத்திய கிழக்கில் உறவினர் உள்ளோர் பதிவு செய்யக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் உறவினர்கள் யாராவது இருந்தால் அவர்களது பெயர் விபரங்களை கிளி. மாவட்டச் செயலகத்தில் பதிவு செய்யுமாறு கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று தகவல் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கிளி. மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் அனைத்து கிளைகளிலும் பெயர் விபரங்களினை பதிவு செய்து கொள்ளுமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைமைக் காரியாலய நிக்கோ திட்டப் பணிப்பாளர் த.சித்திரவேல் தெரிவித்துள்ளார்.

இது போன்று நாடு முழுவதும் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனைத்து கிளை செயலகங்களிலும் மேற்படி பதிவுகளை மேற்கொண்டு அவர்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளுமாறும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நிக்கோ திட்டப் பணிப்பாளர் த. சித்திரவேல் தெரிவித்துள்ளார்.

(சோ, லோ)

## வாழ்க்கைச் செலவை ஆராயக்குழு

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக் குறித்து ஆராயும் வகையில் சிறப்புக்குழு ஒன்றை சிறிலங்கா அரசு நியமித்துள்ளது. 34 சதவீதமான மக்கள் சமாதான முயற்சியால் தங்களது வாழ்க்கைத் தரத்தில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று கணிப்பீடு ஒன்று தெரிவித்துள்ளது.

## கிளி, முல்லை சுகாதார நிலையங்களுக்கு ஊர்திகள் கையளிப்பு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட சுகாதார, வைத்திய நிறுவனங்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட அம்புலன்ஸ் வண்டிகள், கழிவகற்றும் வண்டி, மின்பிறப்பாக்கிகள், குளிரூட்டிகள் போன்றவற்றைக் கையளிக்கும் நிகழ்வு இன்று பி.ப 2.00 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் அரச, அரச சார்பற்ற, சுகாதார, வைத்திய நிறுவனங்களின் தலைவர்களைக் கலந்து கொள்ளுமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி வேண்டியுள்ளார்.

(சோ.லோ)

## கிளி. மாவட்ட மாணவர்களுக்கான பண்ணிசை - கட்டுரை-பேச்சுப்போட்டிகள்

(அலுவலக செய்தியாளர்)

2003 மே திங்கள் 2ஆம் நாள் தொடக்கம் 5ஆம் நாள் வரை நடைபெறவுள்ள உலக இந்து மாநாட்டையொட்டி கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பள்ளி மாணவர்களுக்கிடையிலான பண்ணிசை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் வரும் 5, 6ஆம் நாட்களில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பெற்றுள்ளன. இப்போட்டிகள் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும். கட்டுரைப் போட்டிகள் 5ஆம் நாள் சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கும், பண்ணிசை, பேச்சுப் போட்டிகள் 6ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9.30 மணிக்கும் நடைபெறும்.

போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்குரிய சுட்டெண்கள், வேண்டுகைகள் பள்ளிகளுக்கு அனுப்பப் பெற்றுள்ளன. இத் தகவல்கள் கிடைக்காத பள்ளிகளின் முதல்வர்கள் மாவட்ட ஒருங்கிணைப்பாளராகிய வே. பரமநாதபிள்ளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் வேண்டியுள்ளார்.

(சோ, லோ)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 - 01 - 1913



உதிர்வு 25 - 03 - 1997

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர் உயர்திரு

**கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி**

(ஆயுர்வேத வைத்தியர்)

திதி: 20.03.2003

எண்ணில்லா மாந்தர்மேல சான்றோனாய் நிருதித்து
எண்ணியது எளிதிலாற்றும் வைத்தியனாய் கைதேர்ந்து
மாசறக் கற்றோராய் மக்களை வழிப்படுத்தி
மாநிலம் போற்றும் வண்ணம் பதவிகளை வகித்து நின்று
மேதினியில் சிறப்புடனே வாழும் நெறி வகுத்து
மேன்மையுடன் வாழவைத்த எம்மினிய தந்தையே!
நீர் மறைந்து ஆறாண்டு சென்றாலும் ஆறாது
உம் நினைவு மறையாது நின் சீரிய போதனை.

சி.பேரம்பலம்
(ஆயுர்வேத வைத்தியர்)
சில்வா வீதி, வட்டக்கச்சி. (சி-8034)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# இலக்கை இலகுவாக அடையும் உறுதியுடன் சவாலைத் தொடர்ந்து எதிர்கொள்கிறோம்

## - அமெரிக்க சனாதிபதி ஊடகவியலாளரிடையில் பேச்சு

(வாஷிங்டன்)

**ஈராக் படைகளுடன் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அமெரிக்க பிரிட்டிஷ் படைகள் தொடர்ந்தும் கடும் சவாலை எதிர்கொண்டு வருகின்றன. இதனை அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார். எனினும் தமது இலக்கை அடைவதில் உறுதியுடன் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.**



அமெரிக்க சனாதிபதி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை அவர் கூறினார். நேற்று முன்தினம் நடந்த இந்த சந்திப்பில் அவர் குறிப்பிடுகையில;

ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைனை தோற்கடிக்கச் செய்யும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படையினர் பலத்த சவாலை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஈராக்கை எமது படையினரின் முழு மையான கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரும் சரியான மார்க்கம் இன்னமும் அமைய வில்லை. இந்தப் போர் இப்போதுதான் ஆரம்பமாகியுள்ளது என்று அமெரிக்க மக்கள் உணரவேண்டும்.

ஈராக் எதிர்த் தாக்குதல் களை நடத்தி வருகிறது. எனினும் எமது இலக்கை இலகுவாகச் சென்றடைந்துவிட முடியும்.

ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைன் தனது ஆட்சி அதிகாரத்தை இழக்கும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றார். ஈராக்கின் தெற்குப் பிரதேசம் ஐக்கிய அமெரிக்கப் படை வீரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. என்றும் குறிப்பிட்டார்.

ஈராக்கிய யுத்தம் ஆரம்பிக்கப் பட்டதன் பின்னர் அமெரிக்க சனாதிபதி முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றினை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் தனது பேட்டியில் ஈராக் கைதுசெய்திருக்கும் யுத்தக் கைதிகள் போர் விதிகளுக்கு ஏற்ப நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

பாக்தாத் நோக்கி முன்னேறி வரும் அமெரிக்கப் படைகள் தொடர் பாகக் கேட்கப்பட்ட கேள்வி ஒன் றிற்குப் பதிலளித்த புஷ் ஈராக் எதிர்ப்புப் போரில் ஈடுபட்டாலும் கூட இலகுவாகத் தமது இலக்கை சென்றடைய முடியும் என்று கூறியுள்ளார்.



அமெரிக்காவின் 15வது அதிரடிப் படைப்பிரிவு வீரர்கள் ஈராக்கிய வீரர்களுடன் தரைத்தாக்குதலில் ஈடுபடுகின்றனர்

## சரமாரியான தாக்குதல் ஏற்படுத்தியுள்ள அச்சுறுத்தல்

### - சில நாடுகள் கவலை

ஈராக் மீது சரமாரியாகக் குண்டுத் தாக்குதல் நடத்தப்படுவது அப் பகுதியில் மனித அழிவிற்கும் சுற்றுச் சூழல் சீர்கேட்டிற்கும் வழிவகுத்துவிடும் என்று இந்தியாவும் ரஷ்யாவும் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளன.

வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்சின்ஹாகவுடன் தொலைபேசியில் உரையாடிய ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இகோர் இவானோ ஈராக் மீதான அமெரிக்க தலைமையிலான தாக்குதல் குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டார். ஈராக் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பு மீண்டும் ஐ.நா.பாதுகாப்பு சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என இருநாடுகளும் கருதுவதாகவும் அதற்காக பாடுபடுவது என்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் உறுதிபடக் கூறியுள்ளது.

## இராணுவத்தினர் போல் சுற்றிவளைத்து தீவிரவாதிகள் காஷ்மீரில் தாக்குதல்!

### 24 பொதுமக்கள் படுகொலை


(புதுடில்லி)

ஜம்முகாஷ்மீர் மாநிலம் புல்மாவா மாவட்டத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பதினொரு பெண்கள் இரண்டு குழந்தைகள் உட்பட 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறிநகரில்இருந்து 75 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நந்திமார் என்ற கிராமத்தில் தீவிரவாதிகள் நேற்று அதிகாலை இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

உயிரிழந்தவர்கள் அனைவரும் காஷ்மீர்பண்டிற்றுக்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரைப் போல் உடையணிந்திருந்த தீவிரவாதிகள் தேடும் நடவடிக்கை என்ற பெயரில் உள்ளூர் பொலிசாரின் ஆயுதங்களை அகற்றிவிட்டு கிராமமக்களை ஒன்றுசேரவைத்து கண்மூடித்தனமாக துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்துக்கு எந்த ஒரு அமைப்பும் இது வரை உரிமை கூறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.




## ஈராக்-அமெரிக்க கூட்டுப் படையினரிடையே நாஜாக்,அல்-நஜீரா வில் கடும் மோதல்!

### விமானத் தாக்குதலால் தலைநகர் அதிர்கிறது

ஈராக் போரில் ஐந்தாவது நாளான நேற்று தலைநகர் பாக்தாத்திற்கு தெற்கே உள்ள புனித நகரமான நாஜாக் மீது அமெரிக்கக் கூட்டுப்படையினர் கடும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

ஈராக்கிய இராணுவத்தினர் ரொக்கட்டுக்களை ஏவி எதிர்த்தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாஜாக் நகரம் எதிரிகள் வசம் வீழ்ந்து விடாத வகையில் விமான எதிர்ப்புப் பீரங்கிகளால் ஈராக் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கு ஈராக்கில் பிரிட்டிஷ் படையினரின் கவசவாகனங்களை ஈராக்கியர்கள் தாக்கியதில் இரண்டு பிரிட்டிஷ் வீரர்களைக் காண வில்லை என அறிவிககப்பட்டுள்ளது.

அல்-நஜிராப் பகுதியில் நடைபெற்ற மோதலில் 12 அமெரிக்க வீரர்களைக் காணவில்லை என்று அமெரிக்க இராணுவத்தின் மத்திய தலைமையகம் கூறுகின்றது.

இந்த மோதலில் இருதரப்பினருக்குமிடையே இதுவரை கண்டிராத கடும்போர் நிகழ்ந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. ஈராக்கியப் படையினர் முன்னேறி வரும் நேசப்படையினரை கடுமையாக எதிர்த்து வருகின்றனர். பாக்தாத் மீது நேசப் படைகளின் விமானங்கள் தொடர்ந்து குண்டுமழை பொழிந்து வருகின்றன.

## இராணுவ உதவிக்கு இடமில்லை ஜோர்தான் அரசு அறிவிப்பு!

ஈராக் மீதான அமெரிக்காவின் யுத்தத்திற்கு இராணுவ உதவி வழங்கப்படவில்லை என்று ஜோர்தான் தெரிவித்துள்ளது.

ஈராக்குடனான கிழக்குப்புற எல்லையில் தனது நிலப்பரப்பையோ ஆகாய எல்லையையோ அமெரிக்க இராணுவத்துக்கு வழங்கவில்லை என்று ஜோர்தான் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த யுத்தத்தில் ஜோர்தான் பங்காளியாக இருக்கவில்லை எனக் குறிப்பிட்ட அவர் ஈராக்கிற்கு எதிரான எவ்வித செயற்பாடுகளும் இடம்பெற வில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஜோர்தானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கத் துருப்பினர் ஜோர்தானின் ஆகாயப் பரப்பில் பாதுகாப்பில் மட்டும் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# பெற்றோரை இழந்து அநாதரவான சிறுவர்களை

யுத்தம் காரணமாக தாய் தந்தையரை இழந்து அனாதரவான நிலையில் உள்ள சிறுவர்களையும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சிறுவர்களின் வாழ்விற்கு ஒளியூட்டும் வகையில் 500க்கு மேற்பட்ட சிறுவர்களை தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியுதவியுடன் பராமரித்து வரும் குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லம் தொடர்பான செயற்பாடுகள் குறித்து அறியும்பொருட்டு அதன் இயக்குனர் நவரத்தின கிரிஜா அவர்களுடனான நேர் காணலின் போது...

● குருகுலம் சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் தோற்றம் பற்றிக் கூறுவீர்களா?

1957ஆம் ஆண்டு அப்புச்சி என்று அழைக்கப்படும் வே. கதிரவேலு அவர்கள் கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள கிளிநொச்சி ஜெயந்திநகர் என்ற இடத்தில் ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட தனது காணியில் தனது நிதியில் நிறுவி ஆதரவற்ற சிறுவர்களை உள்வாங்கி இந்த இல்லத்தை நடத்திவந்தார்.

1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கோப்பாய்ப் பகுதியில் இந்திய இராணுவம் மேற்கொண்ட செல் வீச்சில் தனது குடும்பத்துடன் அவர் கொல்லப்பட்டமையால் இச்சிறுவர் இல்லம் செயலற்றுப் போகும் நிலை காணப்பட்டது.

இந்நிலையில் 1990ஆம் ஆண்டு முதல் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இதனைப் பொறுப்பேற்று இன்று வரை நடாத்திவருகின்றது.

இங்கு தற்போது 507பெண் பிள்ளைகள் பயனாளிகளாகப் பயன்பெற்று வருகின்றனர். இங்கு ஒரு வயது தொடக்கம் ஏழு வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் 41 பேர் உள்ளனர்.

தற்போது இங்குள்ளவர்களில் எழுபத்தி ஐந்து வீதமான வர்கள் போரின் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு தமது தாய், தந்தை, உறவினர்களை இழந்த நிலையில் உள்ள வர்கள் தான். மிகுதி இருபத்தி ஐந்து வீதமானவர்கள் ஏதோ ஒருவகையில் கல்வி கற்க வசதியில்லாத நிலையில் காணப்பட்டவர்கள். இவர்களை இனங்கண்டு இணைத்து அவர்களுக்கான வசதிகளும் இங்கு மேற் கொள்ளப்பட்டுள்ளன.

● தாய் போன்று சிறுவர்களை அரவணைத்துக் காத்துவரும் இச்சிறுவர் பராமரிப்பு நிலையம் போரின் தாக்கத்தினால் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது?

இச்சிறுவர் இல்லம் 1996ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட சத்ஜெய இராணுவ நடவடிக்கையின் காரணமாக சகல சொத்துக்களையும் இழந்த நிலையில் பூநகரி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள முழங்காவில் என்ற இடத்தில் மரங்களின் கீழ் இயங்கி வந்தது. பின்னர் அடிப்படை வசதிகள் அற்றநிலையில் தற்காலிக கொட்டகைகள் அமைத்து இச்சிறுவர்களைப் பாதுகாத்து வந்தது.

**நேர்காணல்: சு. பாஸ்கரன்**

இந்த இடப்பெயர்வு காரணமாக மக்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கினார்களோ அவ்வாறான பிரச்சினைகளை இவர்களும் எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகியது. அதாவது பொருளாதாரப் பிரச்சினை, மருத்துவ வசதியின்மை ஏதுமற்ற நிலையில்தான் இவ்வில்லம் இயங்கிவந்தது.

அடுத்து ஓயாத அலைகள் மூலம் கிளிநொச்சிப்பகுதி மீட்கப்பட்டதன் பின் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது. மீண்டும் சொந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் போது ஏற்கனவே இருந்த கட்டடங்கள், மலசலகூடங்கள், கிணறு என்பன முற்றாகச் சேதமடைந்து இருந்தன. அத்தோடு இந்த இல்லத்திற்குச் சொந்தமான 50 ஏக்கர் நிலப்பரப்பிலும் பதினைந்து ஏக்கர் நிலப்பரப்புத்தான் தற்போது பாவனையில் வைத்திருக்கக் கூடியதாகவுள்ளது. ஏனைய நிலப்பரப்புக்கள் வெடிபொருள் அபாயமுள்ள இடமாகக் காணப்படுகின்றன. தற்போது இங்குள்ள கட்டடங்களை, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது நிதியுதவியில் நிறுவியுள்ளது.

● எந்த வகையான சிறுவர்களை இவ் இல்லத்திற்குள் உள்வாங்கி வருகின்றீர்கள்?

பெற்றோரை இழந்த ஆதரவற்ற நிலையில் உள்ள சிறுவர்கள் இலங்கையின் எந்தப் பகுதியில் இருந்தாலும் இங்கு உள்வாங்கப்படுகின்றனர். அத்தோடு கல்விகற்பதற்கு ஆர்வம் இருந்தும், அடிப்படை வசதிகள், குடும்ப நிலை என்பவற்றைக் கருத்திற்கொண்டும் அடிப்படைக் கல்விகற்க வசதியற்ற பெண் பிள்ளைகளையும் அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர்கள், உதவி அரச அதிபர்கள் மூலம் உறுதிப் படுத்திய பின்னர் நாம் எமது நிறுவனத்திற்குள் உள்வாங்கி வருகின்றோம்.


குருகுலம்

தற்போது பதினாறு வயதுடைய பெண்பிள்ளை ஒன்று தனது தாய் தந்தை உறவினர்களைப் போரின்மூலம் இழந்து அடிப்படைக் கல்வியறிவு ஏதுமின்றி இங்கு வந்துள்ளார். இவருக்கு நாம் தற்போது அடிப்படைக் கல்வியறிவைப் போதித்து வருகின்றோம். அதுவும் தனியான ஒரு ஆசிரியர் இவருக்குக் கல்வி போதித்து வருகின்றார். இவருக்கு கல்வியறிவு ஓரளவு வளர்க்கப்பட்ட பின் பாடசாலைக்கு அனுப்பி அவரின் கல்வியை மேம்படுத்திக் கொள்வதோடு ஒரு நற்பிரஜையாக மாற்றமுடியும்.

இதுபோன்று இந்த இல்லம் பலரை நற்பிரஜைகளாக மாற்றியுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

● இந்த இல்லத்தின்மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்ற சிறுவர்கள் எவ்வாறான துறைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்?

அரச நிதியுதவிகள் கிடைக்கின்றனவா?

1967 ஆம் ஆண்டு வலுவிழந்தோர் சமூகத்திணைக் களத்தின் கீழ் சிறுவர் நன்நடத்தைப் பிரிவு திணைக் களத்தில் 2001 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 01ஆம் திகதி முதல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரையும் எந்தவகையான நிதியுதவியும் கிடைக்கவில்லை. ஆனால் தற்போது நிதியுதவிகள் செய்வதாகவும் தெரிவித்திருக்கின்றனர்.

● இந்த இல்லத்திற்கு நலன்விரும்பிகளின் நன்கொடைகள் ஏதாவது கிடைக்கின்றனவா? அவ்வாறாயின் எவ்வாறு நன்கொடைகளை வழங்கிவருகின்றனர்?

தமிழர் புனர்வாழ்வுக் கழகங்களினூடாகவும் நேரில் வந்தும் நன்கொடைகளை வழங்கிவருகின்றனர்.

அவ்வாறு நன்கொடைகள் வழங்கும் நல்ல உள்ளங்கள் இயக்குனர் குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லம் ஜெயந்திநகர் கிளிநொச்சி என்ற முகவரிக்கோ அல்லது தமிழர்புனர்வாழ்வுக் கழகங்களினூடாகவோ வழங்கலாம். நிதியுதவி செய்பவர்கள் இலங்கை வங்கி கணக்கு இலக்கம் சி-863 என்ற வங்கிக்கணக்கில் வைப்புச் செய்யலாம்.

● தற்போதுள்ள சமாதானச் சூழலிலும் சரி இதற்கு முன்னரும் சரி தாய் தந்தையரை இழந்த பிள்ளைகளைப் போராட்டத்தில் இணைப்பதற்காகத்தான் வன்னியில் சிறுவர் இல்லங்கள் தோன்றின. என்ற தென்னிலங்கை அரசியலில் பரப்பப்படும் பொய்யான பிரச் சாரம் பற்றிக் கூறமுடியுமா?

அவ்வாறு தாய் தந்தையரை இழந்து ஆதரவற்ற நிலையில் உள்ள சிறுவர்களைத்தான் இங்கு பராமரித்து வருகின்றோம். விடுதலைப்புலிகளுக்கும் இந்த இல்லத்திற்கும் சம்பந்தம் இல்லை. அவ்வாறு இவ்வில்லத்தில் இருந்து சிறுவர்கள் போராட்டத்திற்கு இயக்கத்தில் இணைந்தால் உரிய அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களை மீளப்பெற்று இருக்கின்றோம்.

ஆனால் அவ்வாறு அரச ஊடகங்களும், இனவாதிகளும் கூறும் கருத்து முற்றுமுழுதாக உண்மைக்குப் புறம்பானதாகும்.

● இச்சிறுவர் இல்லத்தின் சிறுவர் பராமரிப்புப் பற்றியும் செலவு விபரம் பற்றியும் கூறுவீர்களா?

# அணைத்து ஆளாக்கும் குருகுலம்

இவர்கள் கல்வியில் எவ்வளவோ ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர். இங்கு கல்விகற்ற இரண்டு பேர் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகி அவர்கள் தற்போது பல்கலைக்கழகங்களில் எமது செலவுகளில் கல்விகற்று வருகின்றனர்.

அதைவிட கல்விப் பொதுத்தராதர சா/த பரீட்சை வரை கல்வி கற்று அரச சார்பற்ற நிறுவனங்களிலும் ஏதோ ஒரு இடத்தில் தொழில்துறையில் வேலை செய்து வருகின்றனர். இங்கிருந்து வெளியேறும் போது ஏதோ ஒரு தொழிலைப் பெற்றுச் செல்கின்றனர்.

விளையாட்டுத்துறை என்று சொன்னால் மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் வெற்றிபெற்று பாடசாலைகளின் நிலைகளை வெளிக்காட்டுகின்றனர். அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பதினைந்து பேர் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டுள்ளன. கலைத்துறை என்று சொன்னால் பாடசாலைகளில் நடைபெறும் கலைநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தமது கலை ஆர்வத்தை வெளிக்காட்டி வருகின்றனர். தமிழ் மொழித்திறன் போட்டிகளில் பங்கு பற்றியுள்ளனர். அத்தோடு பொதுவாக இடம் பெறும் கலைநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தமது கலை ஆர்வத்தை வெளிக்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


தென்பகுதிக்கான கல்விச் சுற்றுலா

● போரினால் இவர்களிடம் ஏற்பட்டுள்ள உளவியல் தாக்கம் பற்றி?

இங்குள்ள சிறுவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தான். சாதாரண பாதிப்பு என்று சொல்ல முடியாது. தமது பெற்றோர்களையும், உறவினர் களையும் விமானக்குண்டுவீச்சு மூலமோ இராணுவத்தின் எறிகணை வீச்சின் மூலமோ இழந்துள்ளனர். அந்த அவல நிகழ்வுகளைத் தமது கண்களால் பார்த்தவர்கள், தான் இங்கு உள்ள பெரும்பாலானவர்கள். அச்சம்பவங்கள் என்றும் அழியாத வடுக்களாக இருக்கின்றன.

சிறுவர்களை விட வளர்ந்த பிள்ளைகள் தமது வளர்ச்சிப் போக்கிற்கு ஏற்ப தாய் தந்தையரின் இழப்பைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்குவதோடு இந்தப் போரையும் சிங்கள இனவாத சக்திகளையும் பற்றித் தம்முடன் உள்ள சிறுவர்களுடன் கதைத்துக்கொண்டு தமது மனச் சுமைகளை இறக்கிக் கொள்வார்கள்.

● இவ்வில்லம் சமூகசேவைகள் நிறுவனங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதா? பதிவு செய்யப்பட்டிருப்பின்

ஒரு பிள்ளை தனது தாய் தந்தையருடன் இருக்கும் போது எவ்வாறான தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ளுகின்றதோ அதே போன்று தான் அவர்களின் தேவைகளும் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

இங்குள்ள ஐந்து வயதிற்கு உட்பட்ட சிறுவர்களைப் பராமரிப்பதற்கு என்று மூன்று தாய்மார் இருக்கின்றனர். (பராமரிப்பாளர்கள்) தாய் அன்பில் இருந்து எவ்வாறான தேவைகள் ஏற்படுகின்றதோ எல்லாமே வழங்கப்படுகின்றன.


ஐந்து வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள் பாடசாலைக்கு அனுப்பப்பட்டு அவர்களுக்குப் பாடசாலைக் கல்வி போதிக்கப்படுகின்றது. ஐந்து வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு முன்பள்ளிகளுக்கான கட்டட வசதிகள் இல்லாது விட்டாலும் இங்கு ஏதோ ஒரு வகையில் அந்தந்த நேரங்களில் கல்வியூட்டல் நடைபெறுகின்றது.

ஒரு பிள்ளைக்கான ஒருநாள் உணவுத்தேவைக்காக 87 ரூபா செலவாகும். இங்கு பராமரிக்கப்படுகின்ற சிறுவர்களுக்கான மொத்தச் செலவுஎன்ற ரீதியில்

| | |
|---|---|
| • உணவு | 1,20,000 இற்கு மேல் |
| கற்றல் உபகரணம் | 1,25,000 |
| ஆசிரியர் வேதனம் | 39,500 |
| மருத்துவச் செலவு | 1,50,000 |
| பொதுப்பராமரிப்பு | 1,25,000 |
| பணியாளர் வேதனம் | 1,22,000 |
| எரிபொருள் | 3,00,000 |
| காகிதாதிகள் | 12,000 |
| பொது உபசரிப்பு | 10,000 |
| போக்குவரத்துச் செலவு | 10,000 |
| வருடாந்த உடைச்செலவு | 1,50,000 |

என மாதாந்த செலவு மதிப்பீடு அமைகின்றது. □

# இணையத்தின் மூலம்...



இணையம் மூலம் கலந்துரையாடல்

"இணையம்" இன்று உலகளாவிய ஒரு தகவல் தளமாக உள்ளது. இதன்மூலம் ஏராளமான தகவல்களைப் பயன்பாட்டாளர்கள் பெற்றுக்கொள்ள முடிகிறது. இதனுடன் மட்டும் இணையத்தின் பயன்பாடு முடிவடைந்து விடவில்லை. தகவல்களைப் பரிமாற, வாணிபம் செய்ய, பணப்பரிமாற்றம் செய்ய, கலந்துரையாடல்களை மேற்கொள்ளவென நீண்டுகொண்டே செல்கிறது. இவையெல்லாம் இணையத்தை மேலும் பிரபலமுள்ளதாக்கியுள்ளன.

### மின் அஞ்சல் (E-Mail)

இ-மெயில் (E-Mail) என்பது **Electroni Mail** என்பதன் சுருக்கமாகும். நாம்




சாதாரணமாக தபால் மூலம் ஒருவருக்கு தகவல்களைத் தெரிவிப்பது போல் அதேபோல எமக்கு மற்றையோர் தபால் மூலம் தகவல் தெரிவிப்பது போன்ற ஏற்பாடு இதுவாகும். நாம் சாதாரணமாக தபால் மூலம் எழுதி அனுப்பும் தகவல்கள் அஞ்சல் திணைக்களமூடாக உரியவருக்கு உரிய முகவரிக்கு எடுத்துச்சென்று சேர்ப்பிக்கப்படுகிறது. அதேபோல மின் அஞ்சல் மூலம் நாம் மின்அஞ்சல் வசதி கொண்ட ஒருவருக்குத் தகவல் தெரிவிக்க முடியும் இத்தகவல்கள் எழுத்து வடிவிலோ படமாகவோ அனுப்ப முடியும். அத்துடன் நாம் மின் அஞ்சல் ஒன்றை அனுப்பினோமானால் அடுத்தகணமே அது உரியவரின் முகவரிக்குச் சென்றடைந்துவிடும். மிகவும் குறைந்த செலவில் மின் அஞ்சல்களை சர்வதேச ரீதியாக அனுப்ப முடியும். அதேவேளை ஒருவர் உலகத்தில் எங்கிருந்தாலும் இணையமூடாகத் தனக்கு வந்த மின் அஞ்சலைப் பார்வையிடமுடியும் என்பது சிறந்த அனுகூலமாகும். நாம் சாதாரணமாகப் பயன்படுத்தும் அஞ்சல்களை நாம் உரிய முகவரியில் இருக்கும் போது மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் அது வேகம்குறைந்த தகவல் பரிமாற்றமுறையாகும்.

### இ - மணி (E-Money)

இதன்மூலம் உலகளாவிய ரீதியில் பணக்கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள லாம். கணினியூடாக இக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளதால் பணத்தைக் கையில் எடுத்துக்கொண்டு செல்லத் தேவையில்லை.

### இ - வணிகம் (E-Commerce)

இணையம் மூலம் வணிகம் செய்யும் ஒழுங்குமுறையே இ - வணிகம் எனப்படுகிறது. இன்று பல வணிக நிலையங்கள் உலகளாவிய ரீதியில் வியாபாரத்தை மேற்கொள்ளுகின்றன. இவ்வாறான நிறுவனங்களும் சரி உள்ளூரில் விற்பனை செய்யும் நிறுவனங்களும் சரி தமது உற்பத்திப்பொருட்கள் குறித்த விபரங்களை இணையத்தின் மூலம் வெளியிடுகின்றன. இவற்றை 24 மணி நேரமும் பார்வையிட முடியும். இதன் மூலம் தனக்குத் தேவையான பொருள் குறித்த விபரங்கள், அவை கிடைக்கும் இடங்கள், விலைவேறுபாடு என்பவற்றை அறிந்துகொண்டு தெரிந்தெத்து பெற்றுக்கொள்ள முடியும். பயணம் செய்யவோ கடைகடையாக ஏறி இறங்கி விலை விசாரிக்கவோ தேவையில்லை. இருந்த இடத்திலிருந்தே தெரிவு செய்யலாம். இவற்றை வீட்டிற்கே எடுத்து வந்து விநியோகிக்கும் வணிக நிலையங்களும் உண்டு. இணையமூலம் பல சரக்குப் பொருட்கள், புத்தகங்கள், எழுதுகருவிகள், துணிவகைகள், உணவுப் பொருட்கள், சமைத்த உணவைக்கூடப் பெறும் வசதிகள் சில இடங்களில் உண்டு.

இணையம் மூலம் அவற்றைக் கொள்வனவு செய்ய விரும்பாதவர்கள் வர்த்தக நிலையங்களை இணையம் மூலம் தெரிவு செய்து, நேரில் சென்று பொருட்களைப் பார்வையிட்டுக் கொள்வனவு செய்யலாம்.

### இணையத் தொலைபேசி - (Net 2 Phone)

இப்பொழுது உலகளாவிய ரீதியில் உறவுகளை அனுப்பிவிட்டுத் தொலைபேசி மூலமே அவர்களுடன் உரையாடல்களை மேற்கொண்டுவரும் எம்மவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இந்த இணையத் தொலைபேசியாகும். சாதாரண தொலைபேசிமூலம் உரையாடப் பெருமளவு கட்டணத்தைச் செலுத்த வேண்டியுள்ள நிலையில் இணையத் தொலைபேசி மூலம் குறைந்தளவு கட்டணத்துடன் பேச முடிவது பலரையும் வியப்புக்குள்ளாக்கியுள்ளது.

இணையத்துடன் இணைக்கப்பட்ட சாதாரண தொலைபேசி மூலம் உரையாடலை மேற்கொள்ளலாம். இதன்போது அமெரிக்காவுக்குக் குறைந்த செலவுடனும் அதனை அடுத்து கனடா, இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளுக்கு அதனைவிட சற்று அதிகரித்த கட்டணத்துடனும் இந்தியா, பாகிஸ்தான் போன்றவற்றுக்கு சற்று அதிரித்த செலவுடனும் தொடர்புகளை மேற்கொள்ளலாம். அமெரிக்காவூடாக இணைப்பு ஏற்படுத்தப்படுவதாலேயே இந்தியா போன்ற நாடுகளுக்கு இணைப்பை ஏற்படுத்த செலவு அதிகமாகிறது.

### தொலை இணையம் (Tel net)

நாம் தூர இடங்களில் இருக்கும்போது எமது அலுவலகத்திலுள்ள, வீட்டிலுள்ள ஒரு கணினியிலிருந்து தகவலைப் பெற தொலை இணையம் பயன்படுகிறது.

### இணையம் மூலம் கலந்துரையாடல் (Vidio Conference)

இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் குரல் மூலமாக மட்டுமல்ல அவர்களது படங்களைக் கணினித் திரையில் பார்த்துக் கொண்டு கலந்துரையாடுவதாகும். இதன் மூலம் நேரடியாகக் கலந்துரையாடலை நடத்துவது போன்ற ஒரு நிலை ஏற்படுகின்றது. பல நிறுவனங்கள் இந்த வசதி மூலம் பெருமளவு நேர விரயத்தையும் பண விரயத்தையும் தவிர்த்துக் கொள்கின்றன.

இணையமானது இன்று தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள் என்பவற்றிலும் பார்க்க உலகளாவிய ரீதியில் செய்திகளை அறிந்துகொள்ளப் பெரிதும் உதவுகிறது. உலக விவகாரங்களை இதன் மூலம் காட்சிகளாகவும், ஒலிகளாகவும் வரிவடிவங்களாகவும் பார்க்கமுடிவதுடன் அந்த விடயம் குறித்து நாம் விரும்பும் பின்னணித் தகவல்களையும் அறிந்து கொள்ளவுதவுகிறது.

அத்துடன் வானொலி, தொலைக்காட்சி போன்று ஒளி, ஒலிபரப்பு நேரம் என்று ஒன்றைக் கொண்டிராததால் நாம் விரும்பிய நேரத்தில் விரும்பிய செய்திகளைப் பார்வையிடலாம். நாம் விரும்பிய செய்திகளை மட்டும் தெரிவு செய்து பார்க்கக்கூடிய வசதியை இணையம் கொண்டிருப்பதும் அவற்றிலிருந்து மாறுபாடான ஒரு விடயமாகும்.

*சி.சிவபாலன்*

---

# மட்டக்களப்பில் 'நிகொட்' திட்டத்தின் கீழ் மீளக்குடியமர்வு நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதிகள் மீள்குடியேற்றம் வீட்டமைப்பு உதவிகளை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி "நிக்கொட்" திட்டத்தின் கீழ் இருநூறு இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளதாகத் திட்டப்பணிப்பாளர் ஆர்.சிவானந்தராசா தெரிவித்துள்ளார்.

வாகரை கட்டுமுறிவு கிராமத்தைச் சேர்ந்த 225 குடும்பங்களையும் கல்மடு அகதிமுகாமில் தங்கியுள்ள 64 குடும்பங்களையும் மீளக்குடியமர்த்த 63 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மீளக் குடியமரும் அகதிகளுக்கான வீடுகள் அமைக்கப்படுவதுடன் ஏனைய அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் மீள்குடியேற்றத்திட்டம் அமுல்படுத்தப்படும் என்று திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த மாவட்டத்தில் விவசாயம், மீன்பிடி, கால்நடை அபிவிருத்தி திட்டங்களைத் மேற்கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி நிக்கொட் திட்டத்தின் கீழ் இவ்வருடம் 232 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

---

-முல்லை அரச அதிபர்-

# செயலகப் பணிகள் அனைத்தும் முல்லை நகருக்கு மாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் செயலகத்தின் செயற்பாடுகள் யாவும் சொந்த இடத்தில் ஆரம்பித்துள்ளன.

இராணுவ நடவடிக்கை மூலம் இடம்பெயர்ந்து முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையுடன் முல்லை மாவட்ட அரச அதிபர் செயலகம் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இறப்பு பிறப்பு விவாகப் பதிவு அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலக செயற்பாடுகள் யாவும் முல்லைத்தீவிலேயே இடம்பெற்று வருகின்றது.

---

# அடிப்படை வசதிகள் எதுவுமின்றி கற்பித்தல் செயற்பாடுகள் பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் பாண்டியன்குளம் மகாவித்தியாலயம் இயங்கி வருகின்றது.

கல்விப் பொதுத்தராதர உயர்தர கலை, வர்த்தக பிரிவுகளுடன் இயங்கிவந்த இப்பாடசாலை தற்போது ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக இங்குள்ள மாணவர்கள் வேறுபாடசாலைகளுக்கு செல்லவேண்டியுள்ள நிலை உருவாகியுள்ளது.

அத்தோடு தளபாட வசதி, மற்றும் நிரந்தரக் கட்டங்கள் பாதிப்படைந்துள்ளதோடு, தற்காலிக கட்டடங்களும் முற்றாகச் சேதமடைந்துள்ள நிலையில் உள்ளன. ஆசிரியர் விடுதிகளும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

---

# பாதிக்கப்பட்ட இலங்கையருக்கு உதவ 5கோடி ரூபா ஒதுக்கு

(கொழும்பு)

ஈராக் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கென பிரதமர் ரணில் விக்கிரம சிங்க 5கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு நாடு திரும்பியவர்களுக்கு உதவிகள் வழங்கவும் நிர்க்கதி நிலையில் வெளிநாடுகளில் உள்ளவர்களை மீளத் தாய்நாட்டுக்கு அழைப்பதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்யவும் நிதி ஒதுக்குமாறு வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோவும் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.


இதையடுத்து உடனடி உதவியாக 5 கோடி நிதியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒதுக்கியுள்ளார்

# திருமலை உயர்ந்தபாடுப் பகுதியிலுள்ள சட்டவிரோதக் குடியேற்றங்களை அகற்றுக

## - சிறிலங்கா அரசிற்கு மகஜர்

(திருமலை)

**திருகோணமலை மாவட்டத்திலுள்ள "உயர்ந்தபாடு" என அழைக்கப்படும் இந்துக்களின் புனித பிரதேச கடற்கரைப்பகுதியான "தீர்த்தக்கரை" பகுதியில் சட்டவிரோதமாகக் குடியேறியுள்ள சிங்கள மீனவர்களை உடனடியாக அங்கிருந்து அகற்றுமாறு கோரி இந்துக் கலாசார அமைச்சுக்கும் உள்ளூராட்சி அமைச்சுக்கும் முறைப்பாடு மகஜர் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.**



பல இந்து ஆலயங்களைக் கொண்டுள்ள இப்பகுதி தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமாகும். நூறு வருடகாலம் தமிழர் பண்பாட்டுக்குட்பட்டிருந்த இப்பகுதியில் 1990ஆம் ஆண்டுக்குப் பின் சிங்கள மீனவர்கள் குடியேறியுள்ளனர். பல இந்துக் கோயில்களின் தீர்த்த திருவிழாக்கள் இப்பகுதியிலேயே நடைபெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

1987ஆம் ஆண்டு இந்திய அமைதிகாக்கும் படையின் வரவின் பின்பு திருகோணமலை யின் புறநகர்ப் பகுதிகளில் இடம்பெயர்ந்த சிங்களவர்களை சிறிலங்கா இராணுவத்தினர் பிரட்ரிக் கோட்டைப் பகுதியில் குடியமர்த்தியது. இந்திய இராணுவத்தினர் வெளியேறிய பின் 1990ஆம் ஆண்டில் உயர்ந்தபாடு கடற்கரைப் பகுதியில் மீண்டும் தற்காலிகமாக குடியேறிய சிங்கள மீனவர்கள் அரசின் அனுமதியின்றி அங்கு நிரந்தரமாக வீடுகளை அமைத்து குடியேறியுள்ளனர். அதற்கு "சமுத்திரகம" என்றும் பெயரிட்டுள்ளனர்.

அதேநேரம் புறநகர்ப்பகுதியிலும் இவர்களுக்குச் சொந்த நிலங்களும் வீடுகளும் இருக்கின்றன. திருகோணமலை மாவட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தமது குறிப்பேட்டில் தமிழரின் நூறாண்டுகால பாரம்பரிய பிரதேசமான தீர்த்தக் கடற்கரைப் பிரதேசத்தை சிங்களவர்கள் ஆக்கிரமித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

12 வருடங்களுக்கொரு முறை இங்குள்ள கோயில்மூர்த்திகள் இங்கு கொண்டுவரப்பட்டு மாசி மகாமகம் எனும் பண்டிகையை இங்கு கொண்டாடுவர் என சமயப் பெரியோர்கள் கூறுகிறார்கள்.

தற்போது அம்மூர்த்திகளைக் கொண்டு வருவதற்கான ஒழுங்கான பாதைகள் கூட கிடையாது எனவும் கூறப்படுகிறது.

அ.இ.த.காங்கிரஸ் திருமலைக் கிளை இது தொடர்பாக தமது தலைமைப்பீடத்துக்கும் யாழ். மாவட்ட பா.உ.வினாயக மூர்த்திக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளதுடன் இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா அரசிற்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# வாரத்தில் மூன்று நாட்கள் இலவச மருத்துவ சேவை

(அலுவலக செய்தியாளர்)

தருமபுரம் மற்றும் விசுவமடுப் பிரதேச நோயாளர்களின் நன்மை கருதி தருமபுரம் கிழக்கு கிராம சேவை அலுவலகத்தில் கரைச்சிப் பிரதேசசபை முரசுமோட்டை உப அலுவலக ஆயுர்வேத வைத்தியர் வி.பேரம்பலத்தின் மருத்துவ சேவை செவ்வாய், வியாழன், சனி ஆகிய மூன்று நாட்களில் நடைபெற்று வருகின்றது.

இலவசமாக இந்த ஆயுர்வேத மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தனின் ஒழுங்கு படுத்தலில் இது நடைபெற்று வருகின்றது.

(அ)

# எதிர்காலத் திட்டங்கள் குறித்து பேரவை சங்கமத்தில் ஆராய்வு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கோட்ட மட்டத்திலான தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு கடந்த வெள்ளியன்று இடம்பெற்றது.

கோட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச் சுடரினை சின்னக்கிளி ஏற்றினார். தேசியக் கொடியினை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் நவாஸ் ஏற்றி வைத்தார்.

சிறப்புரையில் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி கற்சிலைமடு அ.த..க.பாடசாலை அதிபர் பொ.அருமைச்சந்திரன் கருத்துரை வழங்கினார். சின்னக்கிளி தேசிய எழுச்சிப் பேரவையின் எதிர்கால வேலைத்திட்டங்களைப் பற்றிக் கலந்துரையாடினார். (05)

# குப்பிளான் வடக்குப் பகுதியில் மக்கள் மீது படையினர் கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் வடக்கில் உள்ள பலட்டன் பகுதியில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை அடுத்த முறை பயிர் செய்ய வேண்டாமென இப்பகுதி இராணுவத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இம்முறை மேற்கொண்ட பயிர்ச்செய்கைக் குரிய அறுவடைகளை மட்டும் மேற்கொள்ளுமாறும் வறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் இப்பகுதிகளில் சீவல் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் தொடர்ந்தும் தொழில் செய்ய வேண்டாமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

## -சீன மீன்பிடிக்கப்பல் மூழ்கடிப்பு -

# கண்காணிப்புக் குழுவினரால் விசாரணைக்கு இரு குழுக்கள் அமைப்பு

சீன மீன்பிடிக்கப்பல் முல்லைத் தீவுக் கடற்பரப்பில்தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு இருவிசாரணைக் குழுக்களை அமைத்துள்ளது.

இவ்விரு குழுக்களும் விசாரணை நடத்தி, வரும் புதன்கிழமைக்கு முன் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளன.

இதேவேளை கொழும்பிலுள்ள சீனத் துாதரக அதிகாரிகள் திருமலை கடற்படை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சீனர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

# ஏப்பிரல் முதல் 13 கிராமங்களில் மக்கள் மீள் குடியமர அனுமதி

## - வவுனியா அரச அதிபர் தெரிவிப்பு

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்காப்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள 13 கிராமங்களில் அடுத்த மாதமுற்பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படுவர் என வவுனியா மாவட்ட அரசாங்கஅதிபர் கே.கணேஸ் கூறியுள்ளார்.

மாவட்டச் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை உயர் அதிகாரிகளுடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த உயர் மட்டச் சந்திப்பில் படையினர், பொலிசார், விடுதலைப்புலிகள், போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள், கிராம சேவகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஓமந்தை- தாண்டிக்குளம் வரையான பகுதியில் ஏழு கிராமங்களிலும் செட்டிகுளம் பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள ஆறு கிராமங்களிலும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டிருப்பதாகவும் விரைவில் அப்பகுதிகளிலேயே மக்கள் மீளக்குடியமர முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீள்குடியமர்வுக் கொடுப்பனவில் கைதடி மக்கள் புறக்கணிப்பு!

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து வன்னி மற்றும் வெளி மாவட்டங்களில் வசித்துவிட்டு ஏ - 9 பாதை ஊடாக வந்த மக்களுக்கு வழங்கப்படும் மீள் குடியமர்வுக் கொடுப்பனவு விடயத்தில் கைதடிப்பகுதியில் உள்ள 270 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அத்தோடு வலிகாமம், மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் இடம் பெயர்ந்து சென்று பின் கைதடிப் பகுதியில் மீளக்குடியமர்வதற்காக வந்த குடும்பங்களுக்கும் 15000 ரூபா வழங்கப்படும் என உறுதியளித்து உரிய படிவத்தில் கையொப்பம் பெறப்பட்ட போதும் சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் மீளக்குடியமர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

# 26ஆம் திகதி நீலன் திருச்செல்வம் கொலை வழக்குத் தீர்ப்பு!

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நீலன்திருச்செல்வத்தின் கொலை வழக்கின் தீர்ப்பு நாளை 26 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

இக்கொலை தொடர்பான வழக்கில் சந்தேக நபரான எரிக் சவுந்தரநாயகம் மீதான விசாரணை முடிவடைந்த நிலையிலேயே இத்தீர்ப்பு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலை யில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேல் நீதிமன்றத்திலேயே இவ் வழக்கு நடைபெற்று வருகிறது. இச்சந்தேக நபர் 1998ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து நாடுகடத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

# கிளி.மாவட்ட விவசாயிகளுக்கு 10 நீர் இறைக்கும் இயந்திரங்கள்

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கென சமூக சேவைத் திணைக்களத்தினரால் பத்து நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு கிளிநொச்சி சமூக சேவை திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

மேற்படி நீர் இறைக்கும் இயந்திரங்கள் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு அந்தந்த கிராம அமைப்புக்குழு மூலம் விவசாயிகளின் விவசாய நீர் இறைப்பு பாவனைக்கு விடப்பட்டுள்ளன. (சோ)

## சிந்தனைக்கு



கட்டி எழுப்பப்படவுள்ள தமிழீழத்தின் வளர்ச்சிக்கு ஆயுதத்தை மட்டும் நம்பியிராமல் அனைத்துத் துறைகளிலுமே வளரவேண்டும் என்பதில் நான் அக்கறையாக உள்ளேன்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 25-03-2003

## அழிவுகளை நிறுத்த...!

"நாட்டையும் மக்களையும் அழிவிலிருந்து மீட்டெடுப்பதற்குப் பதிலாக விடுதலைப்புலிகள் தனித் தமிழீழம் அமைப்பதற்கு இவ் அரசு துணை போகின்றது." என்ற ஜே.வி.பி.யின் குற்றச்சாட்டானது வரலாற்றிற்கும், யதார்த்தத்திற்கும் வேறானதாகும். அதாவது கள யதார்த்தம் ஜே.வி.பி.யின் குற்றச்சாட்டு எதிர்மாறானதும் கூட.

யுத்தமே நாட்டையும், மக்களையும் அழிவுப்பாதையில் இட்டுச் செல்பவை என்பது வெளிப்படையானது. இதனை நிருபிப்பதற்கென உதாரணங்கள் கூறப்பட வேண்டும் என்பதல்ல. யுத்தம் என்பதே உயிரழிவு, பொருளழிவு இன்றி நடத்தி முடித்து விடக்கூடியது அல்ல. ஆனால், யுத்தத்தை ஓர் வழி முறையாகத் தேர்தெடுக்கும் போது அதில் வெற்றி பெறுவதன் மூலம் பிரச்சினையை வெற்றிகரமாகக் கையாண்டு விடலாம் என அதிகாரத்தில் உள்ளவர்கள் கருதுகின்றனர். இதன் காரணமாகவே அழிவுகள் இடம்பெறலாம் எனத் தெரிந்தும் யுத்தத்தை தமது வழியாகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

ஆனால், யுத்தத்தின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது இலகுவானதொரு வழி முறையல்ல. அதில் வெற்றி பெறுவதும் கடினமாகும். அனேக சமயங்களில் அவ்வழி முறை தோல்வி கண்டு விடுவதும் உண்டு. இதற்கு சிறிலங்கா அரசு கடந்த 20 வருடங்களுக்கு மேலாகத் தமிழ்மக்கள் மீது மேற்கொண்ட யுத்தத்தினைக் கூட உதாரணமாகச் சுட்டிக்காட்ட முடியும்.

சிறிலங்காவை மாறிமாறி ஆண்டுவரும் இருதரப்பும் - ஐ.தே. கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் - தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை / யுத்தத்தை நடத்தியே உள்ளனர். ஆனால் இவ்யுத்தத்தில் அவர்களினால் வெற்றிபெற முடியவில்லை. தமிழ் மக்களுக்குப் பெரும் உயிரழிவையும், பொருளழிவையும் ஏற்படுத்தியது மட்டுமல்ல, சிங்கள தேசமும் பெரும் உயிரிழப்பையும், பொருளிழப்பையும் சந்திக்க வேண்டியே வந்தது.

இந்நிலையில், நாட்டையும், மக்களையும் அழிவிலிருந்து காக்க வேண்டுமானால் முதலில் யுத்தம் நிறுத்தப்படவேண்டும். இதனையே ஐ.தே. முன்னணி அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. வேறு விதமாகக் கூறுவதானால், யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமானால் புலிகளுடன் உடன்பாடு ஒன்றிற்கு வருதல் என்பது அவசியமானதாகியது. இதனை விடுதலைப்புலிகள் தனியரசு அமைத்தலுக்கு துணை போகின்றதென்ற ஜே.வி.பி.யின் குற்றஞ்சாட்டுவது அடிப்படையில் ஆதாரமற்றதும், தவறானதுமாகும்.

ஏனெனில், சமாதானப் பேச்சுவார்த்தை உண்மையிலேயே விடுதலைப்புலிகளின் தமிழீழத்திற்கான போராட்டத்தையே பாதிப்புறச் செய்துள்ளது. அதாவது, யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே தனியரசிற்கான அடித்தளம் விடுதலைப் புலிகளால் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதாவது ஒரு அரசியற்குரிய நிர்வாகக் கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டிருந்தன.

தமிழீழக் காவல்துறை, தமிழீழ நீதிமன்று, தமிழீழ வைப்பகம், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் போன்ற தனியரசிற்குரிய அடிப்படைக் கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. அதாவது, தனியரசு உருவாகும் வேளையில் துறை சார்ந்த அமைப்புக்கள் தம் பணிகளைச் செய்வதற்கான நிர்வாக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், இவை எவற்றிற்குமான அடித்தளம் தற்போதைய சமாதான காலத்திலோ அன்றி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் சில காலம் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைக்கான காலத்திலேயோ இடப்பட்டவை அல்ல. இதனை இவ்நிர்வாக அலகுகள் யாவுமே பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டிருப்பதன் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

ஆகையினால், ஜே.வி.பி. கூறுவது போன்று இச்சமாதானப் பேச்சுவார்த்தைகள் தமிழீழம் அமைப்பதற்குத் துணை போகின்றது என்பதோ, சமாதானப் பேச்சுவார்த்தையைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் தமிழீழம் நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதோ அர்த்தமற்றதொன்றாகும்.

மாறாக இச்சமாதானக் காலப்பகுதி விடுதலைப்புலிகளின் அரசிற்கான நிர்மாணக் கட்டுமானப் பணிகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவே உள்ளன. இதனைப் புரிந்து கொள்ளாது சமாதானப் பேச்சுவார்த்தைகள் விடுதலைப்புலிகளின் தனியரசு அமைப்பதற்கான நிலைப்பாட்டிற்கு ஆதரவான நிலையை எடுத்துள்ளதாகக் குற்றம்சாட்டுவதும் - விடுதலைப்புலிகளுடன் யுத்தம் செய்ய வேண்டும் என வலியுறுத்துவதுமே, நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் செல்வதோடு விடுதலைப்புலிகள் விரைவிலேயே தனியரசு ஒன்றை அமைப்பதற்கு ஒத்துழைப்பதாகவும் இருக்கக் கூடியதாகும்.

# முன்னைய ஆட்சியாளர்களாலேயே போர் 20 வருடங்களுக்கு நீடித்தது

## - பிக்குமார் சங்க சம்மேளனத் தலைவர் கருத்து

"எமது நாட்டை நிர்வகித்த முன்னைய ஆட்சியாளர்களினாலேயே போர் 20 வருடங்களாக நீடித்தது." இவ்வாறு தேசிய பிக்குமார் சங்க சம்மேளனத்தின் தலைவர் சக்கரவர்த்தி எல்லா வல-மேதா நந்ததேரர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: 1948 ஆம் ஆண்டு டி.எஸ் சேனநாயக்க விவசாயத்தை மேம்படுத்த முயற்சி செய்தார். அது போல பண்டாரநாயக்கவும் சிங்கள மகாசபையைக் கொண்டு வந்தார். தற்போதைய பிரதமர் புலிகளின் தந்திரோபாயத்தில் அகப்பட்டு யுத்தநிறுத்தம் செய்துள்ளார்.

இந்நாட்டில் முதல் சண்டையை ஆரம்பித்தது நாம் அல்ல. அரசு கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகள் வரி வசூலிக்கிறார்கள். நாட்டில் மேலும் சிலர் கத்தோலிக்க அரசை அமைக்க முயல்கின்றனர். வலகம் பாகு, துட்டகைமுனு காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் மேலும் கூறியுள்ளார்.

# பத்துக் கோடி ரூபா மோசடியில் ஈடுபட்ட நபர் கைவிலங்குடன் தப்பியோட்டம்

(கொழும்பு)

ரூபா பத்துக் கோடிக்கு மேல் பெறுமதியான பணத்தை மோசடி செய்தது தொடர்பாக சிறையில் இருந்த ஒருவரை நீதிமன்றில் ஆஜராக்கி மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்து செல்லும் வழியில் தனது கைவிலங்குடன் தப்பியோடியுள்ளார்.

இவர் பல காணி மோசடிகளிலும் ஈடுபட்டு கோடிக்கணக்கில் பணம் பெற்று ராஜபோக வாழ்க்கை வாழ்ந்து வந்தவர் எனக் கூறப்படுகிறது.

இச்சந்தேக நபரை மாறவில நீதிமன்றிற்கு அழைத்து வந்து மீண்டும் தனியார் பேருந்து மூலம் சிறைச்சாலைக்கு கொண்டு சென்ற வேளையில் வழியில் இடைமறித்த சிலர் அவரை வானில் ஏற்றிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகள் சந்தேகிக்கப்படுகின்றனர்.

# குவைத்துக்கான விமான சேவை நிறுத்தம்; ஐரோப்பிய வழிப்பாதைகளும் மாற்றம்!

(கொழும்பு)

சிறிலங்கா விமான சேவை குவைத்துக்கான தனது ஐந்து வாராந்த பறப்புக்களையும் ரத்துச் செய்துள்ளது.

ஈராக்கில் எழுந்துள்ள கொந்தளிப்பை அடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் ஏனைய மத்திய கிழக்கு நாடுகளுக்கான சேவைகள் நிறுத்தப்படமாட்டாது. விமானசேவை உத்தியோகத்தர் கூறும்போது, ஐரோப்பிய நாடுகளுக்கான வழிப்பாதைகள் மாற்றப்பட்டு ரஷ்யா அல்லது வட ஆபிரிக்கா நாடுகளுக்கூடாக சேவைகள் நடாத்தப்படும் என தெரிவித்துள்ளார். இப்பாதைகள் மத்திய கிழக்கில் இருந்து வெகுதொலைவில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கூட்டுத்தகவல் மையத் தலைவர் கூறும்போது, குவைத்துக்கான பறப்புகள் குறைக்கப்பட்டால் காப்புறுதிக் கட்டணம் அல்லது போர் அபாயத்தில் இருந்து பாதுகாக்க முடியும் எனக் கூறியுள்ளார். மேலும் அவர் கூறும்போது, ஐரோப்பா, தூரகிழக்கு நாடுகளுக்கு வேறு திடீர் பாதைகள் இருப்பதாகக் கூறியுள்ளார்.

# இலங்கையின் மனிதஉரிமை பணிகளை மேம்படுத்த வெளிநாடுகள் உதவி

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமைகள் பணிகளை தீவிரமாக்குவதற்கு வெளிநாடுகளும், பல்வேறு அமைப்புக்களும் உதவ முன்வந்துள்ளன.

புதிய பல திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு ஏற்கனவே பல நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இனங்கள் மத்தியில் நல்லெண்ணத்தை மேம்படுத்தும்வகையில் ஐரோப்பிய ஒன்றியம் உதவி வழங்கும்.

இது தவிர மகளிர் மற்றும் சிறுவர்களின் உரிமை பற்றிய வேலைத்திட்டங்களுக்கு பொது நலவாய அமைப்பு நாடுகளின் செயலகம் விருப்பம் தெரிவித்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## - ஆளும் - எதிர்க்கட்சிகள் - மாகாணசபைத் தேர்தலுக்கு தயாராகி வருகின்றன!

ஐக்கிய தேசியக்கட்சியும் பொதுசன ஐக்கிய முன்னணியும் மாகாணசபைத் தேர்தல்களுக்கான தயாரிப்பில் தம்மை ஈடுபடுத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வடமேல் மாகாணத்தின் தேர்தல் நடைபெறவுள்ளது. அதனையடுத்து இரண்டுமாதங்களின் பின் வேறு மூன்று மாகாணசபைகளிற்கான தேர்தலும் நடைபெறவுள்ளது.

## சிற்றுண்டிச்சாலை தீப்பிடித்தது!

(அலுவலக செய்தியாளர்)

முறிகண்டிப் பகுதியில் சிற்றுண்டிச்சாலை ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

கடந்த வெள்ளியன்று காலை தேங்காய் எண்ணையில் தீப்பிடித்து கடையின் சமையல் அறைப்பகுதி எரிந்துள்ளது. (பா)

## ஈராக்கிற்கான சிறீ.தூதுவர் கொழும்பு திரும்பினார்!

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலிருந்த சிறிலங்காவின் தூதுவர் ஜோர்தான் தலைநகர் அம்மான் ஊடாக கொழும்பு திரும்பியுள்ளார்.

ஈராக் அரசாங்கத்தினால் பாதுகாப்பை உறுதிசெய்ய முடியாத நிலை ஏற்பட்டதால் தனது தூதரக ஊழியர்களுடன் அவர் நாடு திரும்பினார்.

# மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த தேசிய கராத்தே சுற்றுப்போட்டி

(அலுவலக செய்தியாளர்)

மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த தமிழீழ தேசிய மாபெரும் கராத்தே சுற்றுப் போட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் இறுதிப் பகுதியில் தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடாத்தப்படவுள்ளது.

தமிழீழத்தில் உள்ள எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி இது நடாத்தப்படவுள்ளது.

அனைத்துப் போட்டியாளர்களும் தங்களை தயார்படுத்திக் கொள்ளுமாறும் மேலதிக விபரங்களை மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர்களுடனோ அல்லது 021-2225715 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளுமாறு தமிழீழ விளையாட்டுத்துறையினர் கேட்டுள்ளனர். (அ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் தின விழா

மட்டக்களப்பு மாவட்டம் அம்பிலாந்துறையில் விவசாயிகள் தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டுள்ளது. இதில் பிரதம விருந்தினராக மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் கலந்து கொண்டார்.





அம்பிலாந்துறை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மட்டக்களப்பு மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் றெஜினோல்ட், மேலதிக உதவி அரசாங்க அதிபர் புண்ணியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மட்டு - அம்பாறைப் பொறுப்பாளர் நிசாம் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 17 விவசாய விரிவாக்கப் பிரிவுகளிலிருந்தும் ஒவ்வொரு விவசாயி வீதம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இறுதியில் கலாச்சார நிகழ்வுகளும், மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியும் நடைபெற்றது.

- திருமலையில் 22ம் நாளாக நடைபெறும் -

# தொண்டராசிரியர் உண்ணாவிரதத்தில் தமிழர் ஆசிரியர் சங்கம் பங்கேற்பு

தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரி அவர்கள் திருகோணமலையில் உள்ள மாகாண கல்வி அமைச்சின் முன்பாக நடாத்தி வரும் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 22 ஆவது நாளாகவும் இடம்பெற்றது.

நேற்று இடம்பெற்ற இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தலைமையில் தமிழர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

நேற்றைய தினம் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கோரிக்கை மகஜரும் அனுப்பி வைக்கப்பட்டது. (25)

- சீன மீன்பிடிக் கப்பல் மூழ்கடிப்பு -

# சீனத் தூதரகத்திற்கு விளக்கம் அளிக்கப்படும்!

(கொழும்பு)

வடபகுதிக் கடலில் சீன மீன்பிடிக் கலம் தாக்கப்பட்டது குறித்து பூரண அறிக்கை கிடைத்ததும் அது குறித்து சீன தூதரகத்திற்கு விளக்கப்படும் என சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை தாம் கோரியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவை சீனத் தூதுவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சம்பவத்தில் பலியான ஏழு பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. இவற்றை பரிசோதனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சீனாவிற்கு சடலங்களை அனுப்பிவைக்க சீன தூதரகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

– வடக்கு – கிழக்கு மாகாண –

# முஸ்லிம் பாராளு. உறுப்பினர்களை நோர்வே தூதுவர் நாளை சந்திப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு சிறிலங்காவிற்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

நாளை நோர்வேத் தூதரகத்தில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாக கலந்துகொள்வது குறித்து விடுதலைப்புலிகளின் தலைமையுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

# பிரதி நிதியமைச்சர் யாழ். செல்லத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காவின் பிரதி நிதியமைச்சர் தலைமையிலான 12 பேர் கொண்ட குழுவினர் யாழ்குடா நாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இவர்கள் அடுத்த மாதம் 5ஆம் திகதி இப்பயணத்தை மேற்கொள்கின்றனர்.

போரில் அழிவுற்ற பகுதிகளை இனம் காண்பதுடன், யாழ் அரச அதிபர் சமர்ப்பிக்கும் முக்கிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பாக ஆராய்வதற்காகவே இக்குழுவினர் யாழ்குடாநாட்டுக்குப் பயணம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (23)

# மன்னார் மாவட்டத்திலுள்ள மாதர் சங்கங்கள் சந்திப்பு

(மன்னார்)

மன்னாரில் உள்ள மாதர் சங்கங்களின் மாநாடு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நகரசபை மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமான இந்த மாநாட்டுக்கு மன்னார் மாவட்ட அரசியல்துறை உதவிப் பொறுப்பாளர் மூர்த்தி தலைமை தாங்கினார்.

வன்னியில் நடைபெறவுள்ள மகளிர் மாநாடு தொடர்பான கூட்டங்களுக்கான ஆயத்தங்கள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் சில முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (மி)

### முதல்வர்...

றுள்ளனர்.

இவரது கொலை தொடர்பான விசாரணைகளை சிறிலங்கா பொலிசார் ஆரம்பித்துள்ளனர்.

### மேலும் 3...

யில் இவர்களது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சீன அதிகாரிகளில் ஐந்து பேர் கொண்ட குழு ஒன்று இச்சடலங்களைச் சென்று பார்வையிட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி சடலங்களை பார்வையிட்டதுடன் பிரேதப் பரிசோதனைக்கும் உத்தரவிட்டுள்ளார். (உ)

### அமெரிக்க- சிறி...

ரிக்கத் தரப்பில் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிரேச் மற்றும் தென்னாசிய விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அமெரிக்கா இராஜதந்திரிகள், அதிகாரிகள் மத்தியில் இலங்கையில் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து அமைச்சர் பீரிஸ் உரையாற்றவுள்ளார்.

### வெளிநாட்டவர்...

சதவீதமான மக்களே நம்பிக்கை கொண்டுள்ளனர் என்றும் இக்கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்கணிப்பானது கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி முதல் பெப்ரவரி 31 ஆம் திகதி வரை சமுகநல அமைப்பொன்றினால் (Social Indicater) நடத்தப்பட்டுள்ளது.

### அமெரிக்க...

படைகள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த வேளையிலேயே இது சுட்டுவீழ்த்தப்பட்டு ஈராக்கிற்கு உள்ளேயே வீழ்ந்து நொருங்கியுள்ளது.

அப்பகுதியில் தாக்குதல் நடத்திய உலங்குவானூர்திகள் மீது தொடர்ச்சியான விமான எதிர்ப்பு ஆயுதங்களால் தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானிகள் தெரிவித்திருக்கின்றனர்.

தாக்குதலில் ஈடுபட்ட சில வானூர்திகளில் சூட்டுக்காயங்கள் இருந்ததாகசெய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த உலங்குவானூர்திகள் ஈராக்கின் ரி.72 டாங்கிகள் மீது தாக்குதல் நடத்தின என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### கொக்காவில்...

வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருவதோடு, இச்சம்பவம் தொடர்பாக இவ்வாகனங்களின் சாரதிகள் இன்று கிளி. மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (பா)

### நேற்று ஒரு..

நேற்று மாலை 5.30 மணிக்கு ஏ.கே. ரவைகள் 6000, 7.1.2 ரவைகள் 12, 60. எம்.எம். எறிகணைகள் 152, 81 எம்.எம். எறிகணைகள் 92, 82 எம்.எம். எறிகணைகள் 50, 120 எம்.எம். எறிகணைகள் 13, ஆர்.பி.ஜி. எறிகணைகள் 94, 120 எம்.எம். பாரா - 01, கைக்குண்டுகள் - 147, 40 எம்.எம். எறிகணைகள் 72, 100 எம்.எம். புறப்பீஸ்கள் 20, 152 எம்.எம். எறிகணைகள் 08, ரி.69 மிதிவெடி 31, ஜொனி வெடி 05, 82 எம்.எம். பாரா 07 என்பன மீட்கப்பட்டு தகர்த்தழிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் பகல் 12.00 மணியளவில் ஆனையிறவுப் பகுதியில் வைத்து 81 எம்.எம். மோட்டார் எறிகணை, கவச எதிர்ப்பு எறிகணை, ஒளியூட்டும் எறிகணைகள் உட்பட ஐந்து வெடிபொருட்கள் தகர்த்தழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பா)

### சிறிலங்கா...

துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு இன்னும் சில விடயங்கள் குறித்து பேச வேண்டியுள்ளதாக சிறி.சு.கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

## பிரதேச செய்தியாளர்களுக்கான கலந்துரையாடல்

ஈழநாதம் நாளேட்டின் பிரதேச செய்தியாளர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் 30.03.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி ஜெயந்தி நகரிலுள்ள பணிமனையில் நடைபெறவுள்ளது.

பிரதேச செய்தியாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பிரதம ஆசிரியர்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.